**O.S. : 157/2021**

Date : 04.09.2023.

வா.சா.1 : சாமுவேல்

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

17.02.2023 ஆவணங்கள் சம்பந்தமாக திருநெல்வேலியில் மேல்முறையீடு வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். மேல்முறையீடு வழக்கு டி.ஆர்.ஓ.நீதிமன்றத்தில் மனு எண்.ந.க.கா.5/2483/2023 என நடந்து வருகிறது என்றால் சரிதான். வழக்கு எண். 25/2023 என்றால் சரிதான். இந்த வழக்கில் 17.02.,2023 ஆவணம் பி.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்துள்ளதில் அது சம்ப்நதமாக மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. 17.02.2023 ஆவணத்தை இறுதி தீர்ப்பாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. சரியாக இருதரப்பை விசாரிக்காத காரணத்தாலும், உரிய ஆவணத்தை பார்வையிடாத காரணத்தினாலும் 17.02.2023 ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முறையான விசாரணை செய்யப்பட்டுதான் உத்தரவு பகரப்பட்டுள்ளது. மேல்முறையீடு வழக்கு தீர்ப்பு வந்தால்தான் விசாரணை முடிவு தெரியும் என்றால் சரியல்ல. புல எண் 383/6 சி பட்டா 1241 என் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. என் அனுபவத்தில்தான் உள்ளது.